(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல் மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேஷ் கிருஷ்ணசாமி, சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.*

திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினோராவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து எட்டாவது முதல் நாற்பத்து ஏழாவது வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS

(உ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று இருபதாவது முதல் நூற்று இருபத்து மூன்றாவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*